[8th September 1958

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர்களே மதசம்பந்தமான நூல்களை ஆபாச புராணங்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்லுவது சரியா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது அவரவர்களுடைய கருத்து.

Tanks

*100-DD *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) போளூர் தாலுகா காள சமுத்திரம் கிராம மக்களிடமிருந்து ஏரி தூர்வார வேண்டுமென்று மகஜர் வந்ததா ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Superintending Engineer (Food Production) has been asked to look into the matter.

SRI S. M. ANNAMALAI : இந்த ஏரியானது 10, 15 வருடங்களாக இதே நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறது. அங்கு நஞ்சை நிலங்களாக இருந்தவை எல்லாம் புஞ்சை நிலங்களாக மாறிக் கொண்டுவருகின்றன. ஆகவே விரைவில் இந்த வேலையை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வப்போது விவசாயிகள் அந்த வண்டலை அகற்றியிருக்கவேண்டும். தொடர்ந்தாற்போல் அகற்றாமல் இருந்ததினால் இது தூர்ந்து போயிருக்கிறது. இதனால் அதிகம் செலவு ஏற்படும். இருந்தாலும் இதை உணவு உற்பத்தி இலாகா கவனித்து வருகிறது

Cattle farms

*100-EE *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to encourage cattle and sheep farming in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement showing the action taken by Government to encourage cattle and sheep farming in this State is placed on the table of the House.

Public meeting.

*100-FF *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether permission has been refused to Sri S. Pakkirisami Pillai for holding a public meeting in the Pensioner's Lines on 23rd June 1958, 24th June 1958 and 25th June 1958; and

(*b*) the reasons for such refusal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government understand that the Commissioner of Police did not receive any application from the Honourable Member for holding a public meeting in the Pensioner's Lines on the dates specified. The question of the Commissioner of Police having refused permission for holding the meeting does not therefore arise.

---

* Printed as Appendix II on pages 384–387 *infra*.

8th September 1958]

Sri S. PAKKIRISAMI PILLAI : தலைவர் அவர்களே, இதற்கு வேண்டிய ஆதாரத்தை இப்போது காண்பித்தால் கனம் மந்திரி அவர்கள் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : This is not the place to produce such evidence. The hon. Member may show it to the Hon. Minister later on.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப் பின்னால் என்னிடம் கொடுத்தால் அதை கவனிக்கிறேன்.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் 3-ம் தேதி கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கேட்டபோது அனுமதி மறுக்கப்பட்டது. பண்டித நேரு அவர்களுக்கு கருப்புகொடி காட்டுவதை விளக்குவதற்காக கூட்டம் கூட்டுவதற்கு அனுமதி வேண்டும் என்று கோரப் பட்டிருக்கிறது. அது மறுக்கப்பட்டது. அப்படியானால் சட்டபூர்வமான கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்போது நகரில் தடையுத்தரவு இருந்தது. அதனால் அனுமதி மறுக்கப்பட்டது.

Sri K. VINAYAKAM : Sir, may I know whether the application to hold the meeting on the dates mentioned here was made in the name of Mr. S. Pakkirisami Pillai in his individual capacity, or was the application made in the name of the Labour Union of which he happens to be the leader?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I have no other information except what I have given just now.

Temples

* 100-GG *Q.*—Sri M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) இந்த ஆண்டு நிதி வசதியற்ற ஏழைக் கோயில்களைச் செப்பனிட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் எவ்வளவு செலவு செய்யப் பட்டுள்ளது ?

(இ) இந்த உதவி இஸ்லாமிய, கிருஸ்தவக் கோயில்களுக்கும் அளிக்கப் படுகின்றதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Rupees 3 lakhs.

(*b*) During 1955–56	Rs. 2 lakhs.
During 1956–57	Rs. 2 lakhs.
During 1957–58	Rupees Nil.

(*c*) No.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, கோவில்களில் ஏழை கோவில்கள், பணக்கார கோவில்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் அதில் இருக்கும் ஏழை கடவுள், பணக்கார கடவுள் இவர்களின் பட்டியல் இருந்தால் கொடுக்க முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பராமரிக்க போதிய வருமானம் இல்லாத கோவில் ஏழைக்கோவில் என்று கருதப்பட்டு வருகிறது. கடவுள்களின் பட்டியல் என்னிடம் இல்லை.